ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவாராய நம:

# ஆர்ய தர்மம்.

பிரத்தியக்ஷானுமானங்களால் கண்டுகொள்ளமுடியாத மறுபிறப்பு, லோகாந்தரம், ஜீவன், ஈசுவரன்முதலிய அனேகவிஷயங்களிருக்கின்றபடியால் அவைகளைத் தெரிந்துகொள்ளுவதற்காகவே சப்தமென்ற வேறுபிரமாணமங்கீகரிக்கப்பட்டது. அது வைதிகசப்தமென்றும், லௌகிகசப்தமென்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளை பால்யத்திலேயே தெரிந்துகொள்ளவேண்டும். அதற்காகத்தான் அக்ஷராப்பியாஸம் பால்யத்தில்செய்விக்கப்படுகின்றது. துவிஜாதிகளாயிருந்தால் உபநயனமாவதற்குமுன் லௌகிகசப்தங்களையும், உபநயனமானபின் பிரதானமாக வைதிகசப்தங்களையும், தேசகாலாதிகளுக்குத் தக்கவாறு மற்ற சப்தங்களையும் கற்றுக்கொள்ளவேண்டியது. பதினெட்டு வித்தியாஸ்தானங்களில் ஒவ்வொன்றிலும் தேவர், முனிவர், மனிதர் ஆகிய நம் முன்னோர்களால் எண்ணிறந்த கிரந்தங்கள் லோகோபகாரமாக இயற்றப்பட்டு சிஷ்யபரம்பராமூலமாக பிரசுரிக்கப்பட்டும் பிரகாசிக்கின்றன. அவைகளுள் ஒன்றிலாவது அனேகங்களிலாவது அவரவர்களது ஜன்மாந்தரவாஸனைக்கேற்றபடி பால்யம் முதற்கொண்டே அப்பியாஸமேற்பட்டிருந்தால்தான் அவை பயனையளிப்பதாகும். தானகவே சிரமப்பட்டுத் தெரிந்துகொள்வதைவிட தெரிந்தவர்களிடம் கேட்டுத்தெரிந்துகொள்வது எளிதாகும். அதனாற்றான் குருமுகமாக அக்ஷராப்பியாஸம் செய்விக்கப்படுகின்றது. எவ்வளவு புத்தி சக்தி வாய்ந்தவனாயினும் வேதசப்தங்களை சுயமாகவே எழுதிப்படிக்கக்கூடாது. குருவினிடம் சென்று அவர் சொல்லுவதிலிருந்து கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டுமேயன்றி, வேறெவ்வித உபாயத்தாலும் தெரிந்துகொள்ளக்கூடாது. அப்படி சுயமாகவே தெரிந்துகொண்டுவிட்டால் அதனால் பின்னிட்டு அடையவேண்டிய பயன் கிடைக்கவேமாட்டாது. இஷ்டப்பட்ட பயனை ஸாதித்துக்கொள்ளவேண்டுமானல் அது இம்மைப்பயனானல் திருஷ்டஸாதனமும், அதிருஷ்டஸாதனமும் கேவலஅதிருஷ்டமான மறுமைப்பயனாகில் அதிருஷ்டஸாதனமும், வேண்டும். ஆகவே கேவலஅதிருஷ்டப்பயனையடையவேண்டிய ஸாதனங்களைப்போதிப்பிக்கும்வைதிகசப்தமெனப்படும் சுருதிஸ்மிருதிமுதலியவைகள் குருமுகமாகவே கற்றுக்கொள்ளவேண்டியவைகளாகும். அப்படியில்லாவிடில் அந்த சப்தங்களில் பதம்பிரிக்கவேண்டிய வழியும் பொருள்படுத்தவேண்டிய வகையும் புரியாமல் திண்டாடவேண்டியதாகும். அப்படியாகாமல் குருமுகமாகவே அவைகளைத் தெரிந்துகொண்டு யாவரும் சிரேயஸ்ஸை அடையவேண்டும். சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ ஆனி-௴ ௭௨


# பிரஹ்லாதசரித்திரம்.

## வித்தியாப்பியாஸம்.

பிரஹ்லாதருக்கு சப்தங்களை உச்சரிக்கும் சக்தி வந்தவுடன் ஹிரண்யகசிபு தனது குலகுருவாகிய சுக்கிராசாரியரை அழைத்து நல்ல முஹூர்த்தம் பார்க்கச்சொல்லி அதில் அக்ஷராப்பியாஸம் செய்வித்தான். ஹிரண்யகசிபு பகவானிடத்தில் த்வேஷம் கொண்டிருப்பதையனுஸரித்து பகவானுடைய மஹிமையைப் புகட்டும் புஸ்தகங்களைப்படிக்கவொட்டாமல் தன்னுடைய பெருமையையே எழுதச்சொல்லி, அவைகளைப் பாடபுஸ்தகங்களாகக் கற்பித்து, பிரஹ்லாதனுக்கும் மற்ற அசுர பாலகர்களுக்கும் கற்றுக்கொடுக்கும்படி சுக்கிராசாரியருக்கு ஆக்ஞை செய்தான். சுக்கிராசாரியரும் அஸுர ராஜனது ஆக்ஞையை நிறைவேற்றவேண்டி, ஹிரண்யகசிபுவின் மஹிமையையே பெரும்பாலும் உபதேசித்து வந்தார். அந்த உபதேசம், கர்ப்பத்திலேயே நாரதமஹரிஷியின் உபதேசத்திலிருந்து பகவத்பக்தி நிறைந்த பிரஹ்லாதன் மனதில் ஏறவேயில்லை. சிறிது நாளானதும் பையன் படித்ததைப் பரீக்ஷை செய்யவேண்டி ஹிரண்யகசிபு, பிரஹ்லாதனை வரவழைத்து சுக்கிராசாரியருடைய ஸன்னிதியில் "குழந்தாய்! இவ்வளவு நாளாக படித்தப்படிப்பைச்சொல், பார்க்கலாம்" என்று வினவ, பிரஹ்லாதன் "என் அய்யனே! ஜனன மரணப் பிரவாஹத்தில் முழுகி ஒன்றுந்தெரியாமல் திண்டாடும் பிராணிகளுக்கு இந்தப் பவபிணியை விலக்கி பரிபூர்ணாநந்தம் பெற பகவத்பக்தியைப் புகட்டும் கிரந்தங்கள்தான்படிக்கத்தக்கன. மற்றதைப்படித்தால்பயனில்லை. பகவானொருவர்தான் பவப்பிணியைத் தீர்ப்பவர். பகவத்பக்திக்குச் சமமான ஸாதனம் வேறுகிடையாது" என்று பகவத்பக்தியைப்பற்றி பெருமையாகப் பேசினான். அதைக்கேட்ட ஹிர

ண்யகசிபு கடுஞ்சினங்கொண்டு கொடூரப்பார்வையால் சுக்கிராசாரியரைப்பார்த்து —' நான் என்ன சொல்லியிருந்தேன், தாங்கள் செய்த காரியம் என்ன ? பையனுடைய புத்தியைக் கெடுத்துவிட்டீர்களே. எனது துவேஷிகளின் பக்ஷத்திற்சேர்ந்துநீங்கள்வேலை செய்து வருவதாகத் தோன்றுகின்றது." என்று கடுமையாகச் சொல்ல, சுக்கிராசாரியரும்— "எங்களால் ஒன்றும் வித்யாஸம் செய்யப்படவில்லை. தங்கள் குழந்தையின் பிராசின வாசனையால் அமைந்த விஷயமேயன்றி வேறு விதமாக நினைக்க வேண்டாம். "பூர்வப்பிரக்ஞை பின்தொடருகின்றது" என்றகருத்தை விளக்கும் சுருதியின் கருத்துத் தங்களுக்குத் தெரிந்ததுதானே" என்றார். அப்பொழுதுஅந்த துராத்மா-"இதையெல்லாம்நான் கேட்கமாட்டேன். பிராசின வாஸனையால் அமைந்ததானாலும் அதை மாற்றவேண்டிய பொருப்புத் தங்களுக்குத் தான். தங்கள் புத்திரர்களையும் சேர்த்துக்கொண்டு எப்படியாவது பிரஹ்லாதனுக்கு இந்த புத்தி மாறி ஸரியான வழிக்கு வரும்படி செய்ய வேண்டியது" என்று ஆக்ஞாபித்து அனுப்பினன். சுக்கிராசாரியரும் அதற்கிணங்கி செய்த வேலையெல்லாம் பிரஹ்லாதனிடம் பயன் படவில்லை. பகவத்பக்தி வாஸனையே அவரது மனதில் திடமாய் நின்றது. இதனால்-பால்யத்தில் மனதிலேறினதுதான்பின்னிட்டும் தொடருமென்று கூறப்பட்ட சாஸ்திரார்த்தம் நன்கு வெளிப்படுகின்றது. தற்காலம் நமது ஆர்யச்சிறுவர்களுக்கு நம்முடைய வைதிக ஸம்மதமான படிப்பும் பழக்கமும்இல்லாமற்போய்விட்டபடியால் அவர்களது புத்தியைப் புதிய பரிஷ்காரத்திலிருந்து இழுப்பது ஸாத்தியமில்லாமலிருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு ஆஸ்திகக் குடும்பத் தலைவர்களும் நமது ஆர்யச்சிறுவர்களுக்கு ஸன்மார்க்கம் புகட்டும் வழியைக் காட்டி க்ஷேமத்தை அடையச் செய்யவேண்டும். சுபம் !

ப—ர்.

---

## சென்னையில் ஸ்ரீ சங்கரஜயந்திமஹோத்ஸவம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் சாகாமடமான தம்புசெட்டிதெரு 119நெ. ஸ்ரீமடத்தில் 9—5—29-ல் மாலை 3-மணிக்கு பக்தகோடி

களுடன்கூட துவக்கப்பட்டது. இவ்வாண்டு அதிகமாக ஸாம, யஜுர்வேதபாராயணங்களும், உபநிஷத்பாஷ்யம், கீதாபாஷ்யம் ப்ரம்மஸூத்ரபாஷ்யம் முதலியவைகள் விதிப்படி பாராயணம் செய்யப்பட்டன. பிரதிதினம் காலையில் மஹன்யாஸபூர்வமாக அபிஷேகம், ஸஹஸ்ரநாமார்ச்சனை, மந்திரபுஷ்பம் முதலியவைகள் செவ்வனே நடைபெற்றன. மாலைகளில் ஸ்ரீமான்களான வி. ஜகதீச்வாசாஸ்திரிகள், கருங்குளம் ஸ்ரீகிருஷ்ணசாஸ்திரிகள், டி. ஆர். ராமசந்திரய்யாவர்கள், ஸ்ரீ ஸோமதேவசர்மா முதலிய வித்வான்கள் பற்பலஉபன்யாஸங்களைச் செய்தார்கள். ஸ்ரீமான் V. கிருஷ்ணஸ்வாமிஅய்யர் அவர்கள் ஆசார்யசரித்திரத்தை பக்கவாத்யங்களுடன் அழகாக காலக்ஷேபம் செய்தார்கள். எண்ணிறந்த பக்தர்கள் வந்து தரிசித்து ஆசார்யப்ரஸாதம்பெற்று தற்கால ஆசார்யரையும் இம்மடத்து மானேஜரையும் வாயாரவாழ்த்திச்சென்றனர்.

(13—5—29) திங்களன்று காலை அநேக பக்தர்கள் வந்து தரிசிக்க பூர்ணாபிஷேகம் நடந்தது. அநேக ஸாதுக்களுக்கு அருசுவை அன்னம் அளிக்கப்பட்டது. இரவு 7 மணிக்கு ஸகல விருதுகளுடன்கூட பின்னர் உபநிஷத்பாராயணம் நடக்க ஆசாரிய விக்ரஹம் அழகியதோர் விமானத்தில் அலங்கரிக்கப்பட்டு வாத்யகோஷத்துடன் வீதிவலம் வந்தது. இடை இடையே "ஜய சங்கர" என்ற கோஷம் வானைப் பிளந்துசென்றது. ஊர்வலம் முடிந்தவுடன் பாராயணக்காரர்களுக்குத் தக்க ஸம்பாவனை செய்யப்பட்டது. பெரியோர்கள் இவ்வாண்டு நடத்திய வைபவங்களையும், ஜனங்களுக்கு உண்டாக்கிய மதபக்தியையும் கண்டு ஸந்தோஷித்து அக்ஷதை அசீர்வாதம் புரிந்தார்கள்.

தீ. இராமநாததீக்ஷிதன்,
கௌண்டின்யன்.

---

# ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(320-வது பக்கத்தொடர்ச்சி.)

எவன் பயனை விரும்பாது கடமையென்று கன்மாக்களைச் செய்து ஈசுவரார்ப்பணம் பண்ணுகிறானோ, அவனிடத்தில் தாங்கள் இடையூறுசெய்வதை நிறுத்தி, சிரத்தை பக்தி முதலான குணங்

களைப் பெருக்கி, அவனை ஆன்மஸ்வரூபத்தில் நிலைக்கச் செய்கின்றனர். अहं ब्रह्मास्मि என்று பாதொருவன் தன்னை ஸர்வஸ்வரூபமாக்க் காண்கிறானோ, தேவர்களும் அந்த ஸ்வரூபத்தில் அடங்கிவிடுகிறபடியால் இடையூறுசெய்ய அவகாசத்தைப் பெறுகிறதில்லை. ஏகத்வத்தை நிலைநிறுத்தினவனுக்கு சோகமோஹாதிகளான அனர்த்தங்களுக்கு அவகாசசிந்தையே கிடையாது. ஆகையால் நிர்மலமான அகண்டாகாரவிருத்தியால் அவித்தை நீங்கப்பெற்று தானே ஸர்வஸ்வரூபியாய் பிரகாசிக்கிறான் என்ற இச்செய்யுள் பிருஹதாரண்யகம் 2-வது அத்தியாயம் 4-வது பிராம்மணத்தின் கருத்தையடக்கிக்கொண்டிருக்கின்றது.

न देवा दण्डमादाय रक्षन्ति पशुपालवत् ।
यं हि रक्षितुमिच्छन्ति बुद्ध्या संयोजयन्ति तम् ॥

என்ற ஸ்மிருதியும், "தேவர்கள், பசுபாலனைப்போல் கையில் தடி எடுத்துக்கொண்டு ரக்ஷிக்கிறதில்லை. சிரவணாதிகளில் தவறுதலில்லாத எவனை ரக்ஷிக்க விரும்புகின்றனரோ, அவனுக்கு ஆன்மஞானோபயோகியான புத்தியையளித்து உதவுகின்றனர்" என்று அறிவிக்கிறது மேலும்,

शिवो हरिः पद्मभवश्च शक्रः सुरासुराः पक्षिमृगाः परे च ।
कीटाहिगुल्मद्रुलताद्रिसिन्धुजातं जगत्सर्वमहं हि सन्तः ॥

"ஸாதுக்களே! சிவனோ, ஹரியோ, பிரமனோ, இந்திரனோ, ஸுரா ஸுரர்களோ, புழுவோ, ஸர்ப்பமோ, புற்பூண்டுகளோ, மாஞ்செடிகளோ, மலைகளோ, ஆறுகளோ ஆகிய ஸகல ஜகத்தும் நானே" என்று அஹம்பாவனையை அவர்களுக்கு போதித்தனர். அவர்கள் யாவரும் தன்யர்களானோம் என்று கொண்டாடி, அவர்களால் அனுக்ரஹிக்கப்பட்டுச் சென்றனர்.

## 31. தீக்ஷிதாளிடம் பேராசைஉண்டென்று சொன்னது

இச்செய்தியைக்கேட்டறிந்த தாத்தாச்சாரியார் அவர்களின் பெருமையை ஸஹிக்காதவனாய், அரசனிடம் வேந்தனே! தீக்ஷிதர் மயசம்பரமாரீசர்கள் போல் மாயாவித்தையையும் நன்குணர்ந்திருக்கிறார். சிஷ்யர்களிடம் யோகாப்பியாஸத்தால் ஸ்வரூப தர்ச

னம் செய்விக்கிறேன் என்று அவர்களை மாயாசக்தியால் சந்தோஷப்படுத்தி மேன்மை பெருகிறார் என்றார். இவ்வாறு அனேகர் தடவை ஏற்கனவே சொல்லி அவைகள் பொறுமையால் சொல்லப் பட்டவை என்று அரசன் நன்கு உணர்ந்ததால் கண்கள் கோபத்தால் சிவக்கவே, தாங்கள் வீடுபோய்ச்சேரும் என்று அரசன் உரைத்தான். அப்போது தாத்தாச்சாரியார் நம்மிடம் அரசன் வைத்திருந்த மானம் போய்விட்டதே என்று வருத்தத்தோடு வீடு சேர்ந்தார்.

அப்போது கதிரவன், பாஷண்டர்கள் கற்கள் இவைகளின் கடினத்தன்மையைப் பரீக்ஷிப்பதற்குப்போல் மேற்குமலையில் ஏறினன் அப்போது தாத்தாசாரியாரின் மனதிற்குள் அடங்காத தமஸ்ஸுபோன்ற இருள்சூழத்தொடங்கிற்று. அத்தருணம் தீக்ஷிதாளின் கீர்த்திஸமூஹம்போன்ற சந்திரகிரணங்கள் ஆகாயத்தில்வியாபிக்கத்தொடங்கவே, அரசன் இரவில்தீக்ஷிதாளின் ஞாபகமாகவே இருந்து காலையில் ஸபாமண்டபத்தையடைந்தான். அப்போது அவ்வாச்சரியத்தை ஸமபுத்தியுள்ள பண்டிதர்கள் சொல்லவே, அரசனுக்கு தீக்ஷிதாளிடம் உள்ள அன்பு மேலிட்டது.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்றபடி தாத்தாச்சாரியாரின் முகத்தில் துக்கக்குறி தோன்றிற்று. இப்படி சிறிது நாட்கள் செல்லுகையில் தனது வார்த்தைக்கு மதிப்பில்லை என்று உணர்ந்தும், தான் ஏராளமான பொருளைச்சேர்த்து வைத்திருப்பதால் அரசனால் தனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை என்று துணிந்து மற்றொரு சமயத்தை எதிர்பார்த்து அரசனிடம் இவ்விதம் கூறலானார்.

नमे देयं वासो नच कनकभूषेभतुरगाः<br>
न राज्यश्रीः कान्तापरिजनसुखेप्सा च नियतम् ।<br>
कुतश्चिन्नो भीतिः तदपि सुहृदं त्वां कुशलिनं<br>
सदाऽस्माकं यूनां कुवलमिव विधुं नोज्झति मनः ॥

"இனித்தாங்கள் எனக்கு வஸ்திரந்தாவேண்டாம். ஸுவர்ண பூஷணங்களும் கஜதுரகங்களும் வேண்டாம். ராஜ்யஸம்பத்திலும் விருப்பமில்லை. பரிஜனங்களாலாகிய இன்பத்திலும் நிச்சயமாய் ஆவலில்லை. ஒருவரிடத்திலும் அச்சமுமில்லை. அப்படியாயினும்,

யௌவனப்பர்வமுள்ள ரஸிகர்களின் சமூஹம் சந்திரனை விட்டுப் பிரிய எங்ஙனம் பிரியப்படவில்லையோ; அங்ஙனம் குசலம் வாய்ந்த உம்மைவிட்டுப்பிரிய எமக்கு மனம் வாவில்லை."

அரசனே! ஒருவார்த்தை சொல்லுகிறேன் கேட்கவேண்டும். அங்கேயழைத்து ஹிதாஹிதம் போதிக்கின்றவர் யார் இருக்கின்றார். பொதுவாகவே அரசர்கள் வித்வான்களுக்கு கிருஹம், க்ஷேத்திரம், ஆராமம், வஸ்திரம், பட்டுப்பீதாம்பரம், பூஷணங்கள் இவைகளைக்கொடுத்து சந்தோஷப்படுத்திக் கீர்த்தியைப் பெறுகிறார்கள். ஆனாலும் பண்டிதர்களுக்கு அரசர்களிடமிருந்து பொருள் பெறுவதில் சந்தோஷமிருக்கவேண்டும். **असन्तुष्टो द्विजोनष्टः** ஸந்தோஷப்படாத பிராம்மணன் கேட்டையடைவான் என்ற நியாயமறியாதவர் யார்? இஃதிருக்கட்டும், அப்பய்யதீக்ஷிதருக்கு தஞ்சை நரஸிம்ம வர்மா வேண்டிய பொருள் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அப்படியிருக்க எதற்காக இவர் இங்கே ஏழைபோல் நடிக்கிறார்? ஜன்மஸித்தமான ஏழைத்தனத்தாலோ, அல்லது பேராசையாலேயோ என்று புலப்படவில்லை. உன்னிடத்தில் விச்வாஸத்தினால் அறிவித்தேனேயொழிய வேறுவிதமில்லை என்றார். அப்போது சின்னபொம்மராஜன், பெரியவரே! ஸ்ரீ காளஹஸ்தி நகருக்கு நரஸிம்மராஜா போகப்போகின்றார். நானும் தீக்ஷிதாளும் தாங்களும் அங்கு போகப்போகின்றோம். அவருக்கு லோபித்தனமிருக்குமானால் அதைப்பற்றி அங்கு ப்ரகாசப்படுத்த ஏற்பாடு செய்துகொள்வோம். தாங்கள் போய்வாருங்கள் என்றான்.

உடனே மகிழ்ச்சியடைந்த தாத்தாச்சாரியார்,

**महार्हाणि महाराजा मनस्सन्तुष्टये पुनः ।**
**वस्तूनि मयि शोभन्ते सुक्षेत्रक्षिप्तबीजवत् ॥**

மஹாராஜனே! சிறந்த வயல்களில் விதைக்கப்பட்ட விதைகள் போல உங்களால் கொடுக்கப்பட்ட விலைமதிக்கப்பெறாத பொருள்கள் என்னால் உம்மிடம் சந்தோஷத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சோபிக்கின்றன என்றார்.

அப்போது வேந்தன் சிவபக்தசிகாமணியின் மஹிமையை இன்னுந்தெளிவாய்ப் பிரகாசப்படுத்துவதற்கே தெய்வம் இவரை இவ்வாறு தூண்டும்படி செய்கின்றது என்று நினைத்து, எல்லாம்

ஸ்பஷ்டமாய்த் தெரியும் என்று சொல்லி விடைகொடுத்து அரண்மனையில் நுழைந்தான்.

## 32. யாகாக்கினியில் பீதாம்பராதிகள் வெளிப்படுவது.

சிறிது நாட்களுக்குள்ளேயே திருக்காளஹஸ்தியில் லக்ஷார்ச்சனஞ் செய்கின்ற நரஸிம்மவர்மாவின் அபிப்பிராயத்திற்கிணங்கி, சின்னபொம்மனும் தீக்ஷிதாள், தாத்தாச்சாரியார் இவர்களோடு அங்குசென்றான். அங்கு ஞானப்ரஸூனும்பாள்ஸமேதரான திருக்காளஹத்திநாதருக்கு நரஸிம்பராஜா செய்த திவ்யாபிஷேகம், லக்ஷதீபம், லக்ஷார்ச்சனை, லக்ஷபிராம்மணபோஜனம், வித்வத்ஸபை இவை விமர்சையாய் நடந்தேறியது. அங்கே தீக்ஷிதாளும் ஒரு யாகஞ்செய்தார். அப்போது அவபிருதஸ்நானத்திற்கு அவ்விரு ராஜாக்களும் தர்சிக்கவந்து கனக பீதாம்பராதிகளையளித்தார்கள். தாத்தாச்சாரியாரும் அங்கே வந்திருந்தார். அரசர்கள் அளித்த ஸுவர்ணபூஷணாதிகளான பொருள்கள் முன்னமே கொடுக்கப்பட்டவைகளைக்காட்டிலும் விலையுயர்ந்தவைகளாயிருந்தன. தீக்ஷிதாளுக்கு தாத்தாச்சாரியாரின் முகத்தில் தோன்றின பொறாமைக்குறி வியக்தமாய்த் தோன்றிற்று. உடனே யஞ்ஞேச்வரான பரமசிவத்தைத் தியானம்பண்ணி அவர்களுக்குமுன்பு யஞ்ஞேச்வரனே! பக்தர்களின் அநுக்ரஹார்த்தமாகவே அவர்களாலளிக்கப்பட்ட பட்டுப்பீதாம்பரஸுவர்ணபூஷணாதிகளான பொருட்களை தங்களிடத்திலேயே सोऽहमस्मि என்று அஹம்பாவனை செய்து அர்ச்சித்திருக்கிறேன், இப்போதும் அர்ச்சிக்கிறேன். அவைகள் யாவையும் தாங்கள் ஏற்றிக்கொண்டிருப்பது ஸத்தியமானால் அற்பமனதால் தவிப்பவர்களும் கண்டுகொள்ளும்படி ஜ்வலித்து அவைகளைத் தாங்கிக் காண்பித்தல்வேண்டும்.

रुद्रोऽग्निरिष्टक्रादितीश्वर एवकेचित् सर्वस्वमर्पयतिचात्मकलेवरेऽन्ये।
यज्ञेश्वरस्त्वमिहतातविपश्चिदादिष्वालोकयस्व भगवन् झटितिप्रसीद॥

'ருத்திரனே அக்கினி யஜமானன் (யாகஞ்செய்கிறவரும்) அந்த ஈச்வரனே என்று சிலர் ஸர்வஸ்வத்தையும் அக்கினியிலேயே அர்ப்பிக்கின்றனர். மற்றவர் தங்களது உத்திரவிலேயே அர்ப்பிக்

கின்றனர். வித்வான் தாத்தாச்சாரியார் பார்க்கும்போதே சீக்கிரத்தில் அநுக்கிரஹிக்கவேண்டும்" என்று பஞ்சேஞ்வரனைத் துதித்தனர்.

அப்போது யாவரும் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும் போதே பக்தசிகாமணிகளின் மஹிமையைப் பிரகாசப்படுத்த விருப்பங்கொண்ட அஷ்டமூர்த்தியான மஹாதேவர் அக்கினி மூர்த்தியின் ஸ்வரூபமாய் உயர ஜ்வலித்துத்தோன்றினர். அந்த அக்கினிஜ்வாலை பக்கத்தில் அணுகமுடியாமல் அவர்களை விலகச் செய்தது. உடனே யாவரும் சிவ! சம்போ! நாங்கள் குற்றமற்றவர், தீக்ஷிதாளே பரமசிவஸ்வரூபிகள் என்ற உறுதிகொண்ட நாங்கள் அவர்களுக்குத் தொண்டுசெய்யும் தாஸர்கள். அறியாமல் நாங்கள் யாதாகிலும்பிழைசெய்திருந்தாலும் மன்னிக்கவேண்டும். ஜ்வாலையையடக்கவேண்டும் என்று வேண்டினர்.

அப்போது ஜ்வாலை சிறிதுசிறிதாக அடங்கி அதிலிருந்து அமிழ்தத்திற்கொப்பான பால், ஆஜ்யம், பீதாம்பரம், ரத்னஹாரங்கள், ஸுவர்ணபூஷணங்கள் ஸர்வதோமுகாதி யாகங்களில் நாஸிம்மவர்மாவால் கொடுக்கப்பட்டிருந்த வஸ்துக்கள் முதலான யாவுமே வெளிப்பட்டன. ச்ரௌதஸ்மார்த்த கன்மாக்களின் மஹிமையை நன்குணர்ந்த அவர்கள்யாவரும் வியந்து தீக்ஷிதாளை சரணமடைந்தனர். த்வேஷிகளுங்கூட ஒன்றுந்தோன்றாமல் மௌனத்தாலேயே வணக்கத்தைக்காட்டினர். பிறகு தீக்ஷிதாள் அக்கினிபகவானைப் பிரார்த்திக்கவே அவைகள் யாகாக்கினியிலேயே மறைந்தன. பிறகு வேந்தர்கள்முதல் யாவரும் தத்தமிடங்களுக்குச் சென்றனர். தாத்தாச்சாரியார் ஒருவருடைய மனம்மட்டிலும் தெளிந்தபாடில்லை.

## 33. ஆத்மபூஜாலிங்காபஹாரத்தால் எதிராளிக்கு நேர்ந்த கதி.

நமது தீக்ஷிதாள் அக்கினிஹோத்திராதி ஸத்கன்மாக்களுக்குரியஇடத்திலேயே வஸிப்பதுவழக்கம் என்பதை முன்னமேயே அறிவித்திருக்கிறேன். ஸ்ரீ காளஹஸ்தியிலிருந்து மறுபடியும் வேலூருக்கு வந்து பட்டணத்திற்கருகாமையில் விளங்காநின்ற அழகிய ஆராமத்தில் சிறிதுகாலம் வாழ்நாள் கடத்தினர்கள். தாத்தாச்சாரியரின் உபத்திரவங்களை மறுக்க சக்திவாய்ந்திருப்ப

தால் இதுவரை மன்னித்திருந்தார். தீக்ஷிதாளுக்கு சத்துரு ஸம்ஹாரம் ஒரு பெரிய கார்யமில்லை. கிருஷ்ணபரமாத்மா சிசுபாலனுடைய நூறு குற்றங்களை மன்னித்ததுபோல் நீடித்தகாலம் மன்னித்தாலும் முடிவில் பரமாத்மா சிசுபாலஸம்ஹாரத்தைச் செய்ததுபோல் தாத்தாச்சாரியார் இனிச்செய்யப்போகின்ற கடைமுறையான குற்றத்தால் அவரது உயிர்களை மாய்க்க தீக்ஷிதாள் கருதினர். அதாவது:—

தீக்ஷிதாள் நன்கு யாவராலும் போற்றப்படுவதற்குக் காரணம் அவர்கள் ஆராதிக்கும் ஸ்படிகலிங்கத்தாலேயே என்று உணர்ந்த தாத்தாச்சாரியார் மூடர்களான துருக்கர்களைக் கொண்டு இரவில் அந்த அவர்களின் உபாஸனாமூர்த்தியை அபகரித்துவிட்டார்.

தீக்ஷிதாள் மறுநாள்காலையில் வழக்கம்போல் ஸ்நானாதிகளான அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பூஜாசாலையில் பிரவேசிக்கவே அங்கு ஆத்மார்த்தமான பூஜாலிங்கம் இல்லாமை கண்டு பாபப்படைந்து ஆறாக்கவலையோடுஐந்துநாட்கள்நீர்கூடப்பருகாமல் உபவாஸமாகவே இருந்தார். ‘திடபக்தியுள்ள மூடனும் தெய்வாராதனமின்றித் தனது உதரத்தைத் திருப்திசெய்யத்துணியான்.’ அப்படியிருக்க ஸர்வக்ஞனான வைதிகசிகாமணிகள் தேவதாராதனமின்றி உண்ணாவிரதமிருப்பதற்குக் கேட்பானேன்? பிறகு அம்மஹான் உலகத்திற்கு சிவதர்மத்தை ஸ்தாபித்து வளரச்செய்ய அவதரித்தபடியால்தான் இவ்விதம் உபவாஸத்தால் க்லேசத்தை அநுபவித்துக்கொண்டு அரசனையடைந்து அன்பார்ந்த அரசனே! இப்போது தாத்தாச்சாரியார் செய்த கார்யம் பெரிய விந்தையாயிருக்கிறது. அவருக்கு உம்மிடத்தில் இருந்த சிறிது அச்சமும் போய்விட்டது. मृदुर्हि परिभूयते ‘பொறுமையோடு இருந்த அவன் அவமானிக்கப்படுகிறான்’ என்ற நீதி பொருள் பெற்றுவிட்டது. சத்துருவையும் மித்திரனாக எண்ணி நான் ஈச்வராராதனஞ்செய்துவருவது யாவருமறிந்ததே. இப்போது நான் ஒரு புதிய ஸ்வபாவமுள்ளவனாக ஆகப்போகிறேன். அவ்விஷயத்தை அறிவாளிகள் நீதியாகவே கருதுவார்கள். சிவபூஜை இல்லாததால் என்னை அண்டின மனைவிமக்கள், சிஷ்யர்கள், ஸந்நியாஸிகள், பாலர்கள், விருத்தர்கள்முதலான யாவரும் தங்கள்

உயிரையும் விட்டுவிடத்தீர்மானித்து நீர்கூடப்பருகாமல் வாடுகின்றனர்.

अद्य रावस्य रावत्वं पश्यन्तु हरियूथपाः ।

என்று தர்மமூர்த்தியான ராகவனும் தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்தினதுபோல் வெளிப்படுத்துகின்றேன். இனி அந்த சிவத்ரோஹி பொறுத்துக்கொள்ளக்கூடியவனல்லன் என்று ப்ரளயகாலாக்னிமூர்த்தி தனது இரண்டு கோரப்பற்களை நீட்டுவது போல் தனது இருபுயங்களையும் உயரத்தூக்கிக்கொண்டு கண்கள் சிவக்கவே, புருவங்களை நெரித்துக்கொண்டு இடிமுழக்கம்போன்ற குரலோடு

सकलभुवनकर्ता साम्बमूर्तिः शिवश्चेत्
निखिलमपि पुराणं सागमञ्चेत् प्रमाणम् ।
यदि भवति महत्त्वं भस्मरुद्राक्षभाजां
किमिति न मृतिरस्मद्द्रोहिणः स्यादकाण्डे ॥

"ஸகல புவனங்களையும் படைத்தவர் ஸாம்பமூர்த்தியான சிவபெருமானேயானால், ஆகமங்கள் புராணங்கள் இவையாவும் பிரமாணமேயானால், பஸ்மருத்ராக்ஷதாரணஞ் செய்பவர்கட்கு மஹத்வம் உண்டானால், நம்மை த்ரோஹிப்பவனுக்கு திடீரென்று மரணம் ஏன் ஸம்பவிக்காது?" என்கவே பரமேச்வரனுடைய அட்டஹாஸம்போன்ற சப்தத்தோடு உண்டான ஒரு இடி அவ்விரோதியைத்தனக்குஇரையாக்கிக்கொண்டது என்றுசிவாநந்தயோகிகள் கூறியிருக்கின்றனர். தாத்தாச்சாரியாருக்கு மூர்ச்சையுண்டாய் பிறகு தீக்ஷிதாளின்கருணையால் ஸ்வஸ்தமானர் என்று சில விருத்தர்களின் அபிப்பிராயம். உடனே அறியாமையால் சத்துருவுக்கு வசப்பட்டு அபகரித்த யவனர்கள் அந்த ஆத்மலிங்கத்தைக் கொண்டுவந்து தீக்ஷிதாளிடம் ஸமர்ப்பித்து சரணம் புகுந்தனர். அவ்வுபாஸனமூர்த்தியைக் கண்டதும் தீக்ஷிதாளும் உறவினர்களும் என் தெய்வமே எங்கு என்னை விட்டுச்சென்றீர் என்று கண்ணீரைப் பெருகவிட்டார். சின்னபொம்மனும் தீக்ஷிதாளுக்கு இவ்வாறு நிகழ்ந்ததைப்பற்றி மனவருத்தப்பட்டு முடிவில் ஆத்மலிங்கம் கிடைத்ததையும் சிவத்ரோஹிக்கு நேர்ந்த விபத்தையும் பற்றி வியந்துகொண்டு தீக்ஷிதாளையும், ஆப்தவர்க்கங்களையும் சமாதானப்படுத்தினன். பிறகு தீக்ஷிதமணிகள் நீராடி அநுஷ்டானத்

களை முடித்து ஸ்படிகலிங்கத்தில் மந்திரபூர்வகமான தியான ஆவாஹனங்களைச்செய்து ஸ்பர்சதோஷாதிகளை அகற்றி, ஆராதனஞ் செய்து வைச்வதேவாதிகளான கன்மாக்களைமுடித்து ப்ராணாக்னிஹோத்திரத்தைச் செய்தார்கள்.

அப்போது இச்செய்தியையறிந்த சிவபக்தசிகாமணிகளின் மனது நிர்மலமாயிற்று.

**संकल्प्य स्थाणुशास्त्रप्रचरणविहतिः स्वेन कार्या भुवीति**
**श्मश्रूणि स्वैरमश्रूण्यपि बत महतां स्पर्धया वर्धयन्तः ।**

அகண்டமான இப்பூமண்டலத்தில் ஒரு கோணத்தில்கூட சைவ சாஸ்திரமிராமல் செய்துவிடவேண்டும் என்று ஸங்கல்பித்து மீசிகளை தைர்யமாய் முறுக்கிக்கொண்டு பொறுமையால் மஹான்களின் நேத்திரங்களில் கண்ணீரைப் பெருகச்செய்துகொண்டும், சிற்சில ராஜாக்களுக்கு மந்திரோபதேசஞ்செய்து சிஷ்யபலத்தை ஸம்பாதித்துக்கொண்டும் பற்பலவிதமாக பஸ்மருத்ராக்ஷதாரிகளைத் துன்புறுத்தத் தலைப்பட்டவர்கள் தானே ஒடுங்கிவிட்டனர். இதன் உத்தரார்த்தத்தின் எழுத்துக்கள் தெரியாததால் எழுதப் படவில்லை.

பிறகு தீட்சிதாளைச் சரணமடைந்த ஸகலரும் சிவபூஜாவிதியில் சிரத்தைகொண்டு அநுதினமும் சிவாராதனஞ்செய்து ச்ரேயஸ்ஸையடைந்தனர்.

## 34. ஓர் அறிவிப்பு.

இதுகாறும் தாத்தாச்சாரியாருக்கும் நமது தீக்ஷிதாளுக்கும் நிகழ்ந்தவாலாற்றை எழுதுவதற்கு ஸ்ரீ சிவானந்தயோகிகளால் வெளியிடப்பட்ட அப்பயதீக்ஷிதசரித்ம் துணையாய் நின்றது. இதைப்பற்றினவிஷயங்களைத்தெளிவுற அறியக்கருதின நான்விடுமுறைநாட்களில் அவ்விருவர்வம்சத்து விருத்தர்களைக்கண்டு அறிந்துகொண்டிருக்கிறேன். அவ்விஷயத்தில் தீக்ஷிதாளின் பிரதிவாதிகளின் வரலாற்றையும் பிரகிருதசரித்திரத்திற்கு அநுகுணமாய் எழுதமுன்வருகிறேன்.

கோடிகன்னிகாதானம்தாத்தாச்சாரியார் வம்சத்தாரிடமும், காஞ்சீபுரம்பக்கத்தில் பிரசித்திபெற்ற தொட்டாச்சாரியார் மரபில் உதித்தவர்களிடத்திலும், ஸ்ரீசுமதீந்திரமடம் மத்வாச்சாரியார் விஜயேந்திரசுவாமிகளின் சரித்திரமறிந்தவர்களும் வையாகரண

சார்வபௌமாளும் கும்பகோணம் வியாஸராயர் அக்கிரஹாரத்தில் வசிக்கிறவர்களும் எண்பதுவயதுள்ளவர்களும் என்னுடைய வ்யாகரண ஆசாரியாளுமான சேதுமாதவாசாரியாளிடமிருந்தும் அறிந்தவைகளை இங்கு வெளியிடத்தொடங்குகிறேன்.

முன்பு தீக்ஷிதாளின் அர்ச்சாலிங்கத்தை அபஹரித்த தாத்தாச்சாரியாருக்கு சிவத்ரோஹத்தால் ஆபத்தே நிகழ்ந்ததென்று சிவானந்தயோகிகளின் அபிப்பிராயத்தை வெளியிட்டபிறகு மற்றும் சிவஞானவிருத்தர்களின் அபிப்பிராயத்தை அனுசரித்து தாத்தாசாரியாருக்கு ஏற்பட்டமூர்ச்சை தீக்ஷிதாளாலேயே நீக்கப்பட்டதென்று எழுதியுள்ளோம். இந்தஅம்சமே மேலேவரையப்படுகிற சரித்திரத்திற்கு சாலவும்பொருத்தமாயிருக்கின்றது.

## 35. திருப்பதி யாத்திரை.

பிறகு தாத்தாசாரியார்அவர்கள் தீட்சிதாளிடம் மிகுந்த மஹிமையை நன்குணர்ந்து தன்னால் பலதடவை செய்யப்பட்ட தீங்குகளைமன்னித்து மூர்ச்சையையும் நீக்கினவிஷயத்தில் அவர்களிடம் விரோதபாவனையைத்துறந்து நன்றியுள்ளவராய் நட்புடன்இருந்தார்கள். ஆனாலும் மற்றும்சிலர் சைவசாஸ்திரப்பிரகாரத்திற்குத்தடங்கல்செய்ய கங்கணம்கட்டிக்கொண்டும் பெரியோர்களிடம் பொறாமைகொண்டும் அவர்களைக்கண்ணீர்பெருகச்செய்துகொண்டும் கர்வங்கொண்டவர்களாய் உபத்திரவித்தனர் என்று தெரிவிக்கிறபழைய ஏட்டுச்சுவடிகளில் உள்ள ஒருசுலோகத்தின் பூர்வார்த்தத்தை குறிப்பிடுகிறேன்.

**संकल्प्य स्थाणुशास्त्रप्रचरणविहतिः स्वेनकार्या भुवीति**
**श्मश्रूणि स्वैरमश्रूण्यपि बत महतां स्पर्धया वर्धयन्तः ।**

முடிவில் எவ்வாற்றாலும் தீட்சிதாளுக்கு சிவானுக்கிரஹத்தால் காரியங்கள் ஸித்திக்கின்றன.

இஃது இருக்கட்டும். நமது தீட்சிதாளும் தாத்தாச்சாரியாளும் திருப்பதிமலையில் ஏறிச்செல்லும்பொழுது தாத்தாச்சாரியருடைய சிவத்வேஷம்மாறியிருக்கிறதா இல்லையாஎன்று பரீட்சிக்ககருதின தீட்சிதாள் காளிகோபுரம்போகும்பொழுது ஸ்ரீ காளஹஸ்திமலை தென்படுகிறது பாருங்கள்என்று தாத்தாச்சாரியரிடம்சொன்னார்கள். அப்பொழுது அவர் அசிரத்தையோடு ஒருகண்ணைமூடிக்

கொண்டு மற்றகண்ணால் பார்ப்பதுபோல் அபிநயித்தார். அக்க்ஷணமே மூடினகண் ஊனமாய்விட்டது. பிறகு தான் ஸ்ரீ காளஹஸ்திநாதரிடம் அசிரத்தைவைத்ததால் இங்ஙனம் நிகழ்ந்ததென்று எண்ணின தாத்தாசாரியார் மறுபடியும் அக்கண்ணைப் பிரகாசப்படுத்தும்படி முக்கண்ணனுடைய அம்சம்பொருந்தின திட்சிதரைவேண்டவே, அவர்கள் அதற்கு இசைந்து, ஸ்ரீ காளஹஸ்திநாதனைத்துதித்தார். அதனால் அவருடையகண் முன்போலவே நிர்மலமாய்ப்பிரகாசித்தது. பிறகு இருவரும் வெங்கடநாதரை தரிசித்துத்திரும்பினர்.

## 36. பிராயச்சித்தம் விதித்தது.

பிறகு அவ்விருவர்களும் ஸ்ரீ காஞ்சியில் சிறிது காலம் வஸித்தனர். தாத்தாச்சாரியாருக்கு ஒருவாறு சிவத்வேஷம் நீங்கினாலும், மற்ற வைணவர்களிடமுள்ள அச்சத்தால் ஏகாம்பரநாதனை தர்சிப்பதில்லை. தீக்ஷிதாளோ ஸமபுத்தி யுள்ளவரானதால், அநுதினமும் நித்திய கன்மாக்களைச் செய்துமுடித்து ஏகாம்பரநாதனையும், வரதராஜனையும், தர்சித்த பின்பே புஜிப்பார்கள். இவ்வாறு இருக்கும்போது, ப்ராயச்சித்தங்களைச் செய்து கொள்ள நேரிடுங்கால் சைவர் வைணவர் யாவரும் நமது தீக்ஷிதரைக் கொண்டே நிர்ணயிப்பது வழக்கம்.

ஒரு சமயம் காமபாசத்திற்கு வசமாய், தாத்தாசாரியார் ஒரு கொடூரமான பாபச்செயல் செய்தாரென்று வைணவர்கள் ஒன்றுகூடி அவரைப் பஹிஷ்கரித்தனர். அவர்களில் சிலர் பிராயச்சித்தம் செய்துகொண்டால் சேர்த்துக்கொள்ளுகிறோம் என்று அவருக்குத் தெரிவித்தனர். அப்போது பரிஷத்து ஒன்றுகூடினார்கள். அப்போது தீக்ஷிதாள் ப்ராயச்சித்தியான புருஷன் அநுதாபத்தோடு பரிஷத்தில் தனது குற்றத்தை அறிவித்துக்கொள்ள வேண்டும் என்றார்கள், தாத்தாச்சாரியாரும் அவ்வாறே ஸபையில் அநுதாபத்தோடு குற்றத்தை அறிவித்தார். உடனே தீக்ஷிதாள் பிராயச்சித்தங்களை விதிப்படி நிர்ணயித்து இப்பாபத்தை நீக்கிக் கொள்ளுவதற்கு ஒரு மண்டலம் சிவாராதனம் முதலில் செய்ய வேண்டும். இக்காஞ்சியிலேயே ஏகாம்பரநாதனை ஆராதித்தல்

போதும் என்றார்கள். அதற்கு அவர் உள்ளத்தில் சம்மதித்தாலும், மற்ற வைணவர்கள் பரிஹஸிப்பார்கள் என்று மனங்கலங்கி வேறு சிவக்ஷேத்திரத்தில் அங்ஙனம் செய்வதாக ஒப்புக்கொண்டார்.

பிறகு தீக்ஷிதாள் திருக்கழுக்குன்றத்தில் ஒரு மண்டலம் சிவாராதனம் செயயும்படி சொல்லவே, தாத்தாச்சாரியார் அதற்கு இசைந்து அவ்வாறே தனது முக்கியபந்துக்களுடன் புறப்பட்டு யதேஷ்டமான பொருள்களையும் செலவுசெய்து, திருக்கழுக்குன்றத்தில் சிவாராதனஞ்செய்தார். அங்கே தாத்தாச்சாரியார் கோபுரத்தைக் கட்டுவித்தார். அங்கு தனது ஆப்தபந்துக்களுக்கு ஸர்வமான்யமாக நிலங்கள் வாங்கிக்கொடுத்து சிவாராதன கைங்கர்யம் செய்ய ஏற்பாடுபண்ணினார். இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செய்பவர்கள் பக்ஷபாதமாகக் கட்டினகதையென்று ஐயமுறவேண்டாம். அப்படிஐயமுள்ளவர்கள் இக்கணமே திருக்கழுக்குன்றஞ்சென்று, சிவாலயஞ்சென்றால், இன்றைக்கும் அவ்வைணவர்களை சிவாராதன கைங்கர்யஞ்செய்து வருவதைக் காணலாம்.

சில வருடங்களுக்கு முன் அக்கைங்கர்யத்தை விட்டுவிடத் தீர்மானிக்கவே அவர்களுக்கு வயிற்றில் பிணிஉண்டாயிற்று. பிறகு அந்தக்கைங்கர்யத்தைஏற்றுக்கொண்டு அந்நோய்நீக்கப்பெற்று தாத்தாச்சாரியாரால் கொடுக்கப்பட்ட ஸர்வமான்ய நிலங்களையும் அநுபவித்துக்கொண்டு குறைவற சிவகைங்கர்யஞ்செய்து வருகின்றனர்.

## 36. சில வைணவர்களின் அபிப்பிராயம்.

நமது தீக்ஷிதாளுக்கு முன்னோர் சிவவிஷ்ணுக்களை அபேதமாக பாவித்து, அத்வைதத்தையே பிரதானமாகக்கொண்டவர்கள். தீக்ஷிதாளும் அதேவழியைப்பின்பற்றினவர். தீக்ஷிதாளின் பிதாமஹரான வக்ஷஸ்தலாச்சாரியார் அவர்கள் வரதராஜவஸந்தமஹோத்ஸவம்என்று வரதராஜரின் மஹிமையை ஒருநூலாக இயற்றியிருக்கின்றனர். தீட்சிதாளின் பிதாவுக்கு ரங்கராஜர்என்று திருமாலின்பெயராலேயேநாமகரணமிடப்பட்டிருக்கிறது. மேலும் அந்த ரங்கராஜதீட்சிதர் அத்வைதவித்யாமுகுரம் முதலான அத்வைதநூற்களையேஇயற்றியிருக்கின்றார். பிறகு அப்பயதீட்சிதாளை

ஒருவியாஜமாக அழைத்து ஸங்கல்பசூரியோதயநாடகத்தை நடித்துக்காட்டின சிலர் ஸபையில் தீட்சிதாளை அவமதித்ததால் அவர்கள் ஆக்ரஹங்கொண்டு விஷ்ணுவைக்காட்டிலும் சிவனுக்கு உத்கர்ஷத்தை நிலைநாட்டினர்என்கிறார்கள். அந்தச்லோகமாவது ஸங்கல்ப சூர்யோதயம் 2-வது அங்கம்.

यतीश्वरसरस्वतीसुरभिताशयानां सतां
वहामि चरणाम्बुजं प्रणतिशालिना मौलिना ।
तदन्यमतदुर्मदज्वलितचेतसां वादिनां
शिरस्सु निहितं मया पदमदक्षिणं लक्ष्यताम् ॥

“ ஸ்ரீ பாஷியகாரரான ஸ்ரீ ராமாநுஜரின்வாக்கால் வாஸிக்கின்ற எண்ணங்கொண்ட ஸாதுக்களின் பாதகமலத்தை வணங்குந்தன்மையுள்ள தலையால்சுமக்கிறேன். அதைக்காட்டிலும் வேறானமதங்களின் துர்மதத்தால் ஜ்வலிக்கும்மனமுள்ள வாதிகளின் தலையில் என்னால்வைக்கப்பட்டது இடதுகால். பார்க்கப்படட்டும் ” என்று அச்செய்யுளின் கருத்து.

இந்த விஷயத்தின் உண்மையைப் பண்டிதர்களே நிர்ணயித்துக்கொள்ளட்டும். நமது தீட்சிதாளுக்கு விஷ்ணுவினிடம் பக்தி உண்டென்பதை விளக்கிக்காட்ட வரதராஜஸ்தவம் ஒன்றே போதும். மேலும் யாதவாப்யுதயத்திற்கு வியாக்யானத்தை அருளிச்செய்த அம்மஹானிடம் வைணவர்கள் நன்றிகாட்டக் கடமைப்பட்டவர்களே. நமது தீட்சிதாள் கேவல சைவர் என்று சிலர் நினைப்பது அவர்களின் கிரந்த ஆராய்ச்சியில்லாமையால் ஏற்படுகின்றது. அவர்கள் கேவலஅத்வைதிகள். ஆனாலும் ஸகுணோபாஸனத்தால்தான் ஞானம் ஏற்படும் என்று கருதுகின்ற அவர்கள் சிவனிடத்தில் அதிகப்பற்றுள்ளவர்கள். இவ்விஷயம் அவர்களால் ஆக்கப்பட்ட சிகரிணீமாலை, சிவதத்வவிவேகம், சிவார்க்கமணிதீபிகை என்ற நூற்களாலே விசதமாய்த் தெரிகின்றது. அவைகளைப்பற்றி முடிவுரையில் எழுதுகிறேன்.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.